2012 ஏப்ரல் 18]

அவர்கள் ஆணையிட்டுள்ளதன்படி, நீர்ப் பாசனத்திற்கு பாதிப்பு ஏற்படுகின்ற அணைகளிலே தூர் வாருகின்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கூடிய விரைவிலே இந்த அணையிலும் தூர் வாரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 116, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

116—

கூட்டுறவுச் சங்கம்

6435*—திரு. என்.டி. வெங்கடாச்சலம்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறையில் விசைத்தறி தொழில் கூட்டுறவுச் சங்கம் துவக்கி துணிகளை விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பெருந்துறையில் விசைத்தறி தொழில் கூட்டுறவுச் சங்கம் துவக்கி துணிகளை விற்பனை செய்ய விசைத்தறி நெசவாளர்கள் முன்வந்தால் புரட்சித் தலைவி அம்மாவின் அரசு ஆவன செய்யும் என்பதை பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.*

முற்பகல் 10—55

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே விசைத்தறித் தொழிலுக்காக ஒரு ரூபாய்க்கு ஒரு யூனிட் மின்சாரம் வழங்கிய ஒரே முதலமைச்சர்*

புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி). ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியிலே, விவசாயத்திற்கு மாற்றாக இன்று விசைத்தறித் தொழிலில் கிட்டத்தட்ட 40,000 விசைத்தறிகள் இயங்கி வருகின்றன. கிட்டத்தட்ட 5,000 விசைத்தறித் தொழில் முனைவோர்கள் அங்கு இருக்கின்றார்கள். ஆகவே, ஒரு இலட்சம் தொழிலாளர்கள் இருக்கக்கூடிய அந்தப் பகுதியிலே, அவர்களை உறுப்பினர்களாக்கி, ஒரு சங்கத்தை அங்கு உருவாக்கி, 500 யூனிட் இலவச மின்சாரத்தையும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நூல்களை அவர்களுக்குக் கொடுத்து, சந்தைப்படுத்துவதன் மூலமாகவும், இளைஞர்களுக்குக் கடன் கொடுப்பதன் மூலமாகவும், விசைத்தறித் தொழிலை முன்னேற்றுவதற்காக—அதற்காக பெரிய அளவிலே இடம் தேவையில்லை. சிறிய அளவிலே, வருவாய்த் துறையின் மூலமாக அந்த இடத்தை நாங்கள் இன்றைக்கு பெற்றுக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்றோம்.—அப்படிப்பட்ட ஒரு சங்கத்தை அமைப்பதற்கான உத்தரவை மட்டும் கொடுத்தால் போதும் என்ற ஒரு கோரிக்கையும் வைத்து, அதைச் செய்ய அமைச்சர் முன்வருவாரா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு, விசைத்தறி நெசவாளர்களுக்கு 500 யூனிட் இலவசமாக மின்சாரம் கொடுப்பதற்காக ஒரு நிதியாண்டிற்கு 62 கோடி ரூபாய் அளவில் செலவு செய்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விசைத்தறி நெசவாளர்களின் நலன் கருதி, தொழிலியல் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கின்றார்கள். ஒரு விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு குறைந்தபட்சம் 25 உறுப்பினர்கள் இருக்கவேண்டும். அதோடு கட்டடம் கட்டுவதற்கு 13 ஆயிரம் சதுர அடி இடம் தேவைப்படுகின்றது. குறைந்தபட்சம் 49 தறிகள் இருந்தால்தான் இந்தத் தொழிலியல் கூட்டுறவுச் சங்கம்

2012 ஏப்ரல் 18]

இலாபகரமாக இயங்க முடியும். அதோடு, உரிய நேரத்தில் வந்தால்தான்—ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இந்தத் தொழிலியல் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. இவ்வாறு பல்வேறு இடங்களில் புரட்சித் தலைவர் அவர்கள் காலத்தில் இங்கே ஏற்படுத்தப்பட்டு, 1987 மற்றும் 1988 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தாட்கோ திட்டத்தின்மூலமும், இலங்கை அகதிகளுக்கு மறுவாழ்வுத் திட்டத்தின்மூலமும் இதுபோன்று விசைத்தறித் தொழிற்கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டு, இன்றையதினம் மூடப்பட்டிருகின்ற சூழ்நிலை இருகின்றது. ஆகவே, வரக்கூடிய காலங்களில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டம் போன்று, மாணவ மாணவிகளுக்கு விலையில்லா 4 செட் யூனிஃபார்ம் கொடுக்கின்ற திட்டத்தின்மூலம்—தொழிலாளர்கள் முன்வந்தால் கட்டாயம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அந்தத் துறையின்மூலம் விசைத்தறி தொழிலியல் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு இலாபகரமாக இயக்குவதற்கான நடவடிக்கை இந்தத் துறையின்மூலம் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரியப்படுத்திக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தங்கள் வாயிலாக நன்றி கூறி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.

திரு. க. தினகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூலூர் தொகுதிக்குட்பட்ட கருமத்தம்பட்டி, சோமலூர் பகுதி, பல்லடம் உட்பட்ட அனைத்துப் பகுதிகளுமே விசைத்தறிகள் நிரம்பிய பகுதி. அந்தப் பகுதிகளிலே உள்ள மக்கள் விசைத்தறியாளர்களுக்கென்று தனி வாரியம் அமைக்க வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதற்கு ஒரு தனி வாரியம் அமைத்துக் கொடுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், மின்சாரக் கட்டண

உயர்வின் காரணமாக, அங்கே உள்ள மக்கள் மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பது வரைக்கும் மின்சாரக் கட்டணம் கட்டமாட்டோம் என்று போராட்டம் அறிவித்திருக்கிறார்கள். அதற்கும் நீங்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், அதற்குத் தனிக் கேள்வி போடவும். தனி வாரியம் அமைப்பது, மின் கட்டணம் எல்லாம் இதில் வராது. எனவே, அதற்குத் தனிக் கேள்வி போடலாம்.

அடுத்து, வினா வரிசை எண் 117, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

117—

சுற்றுலாத் தலம்

***5463—திரு. வே. குணசீலன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, வந்தவாசி வெண்குன்றம் தவளகிரீஸ்வரர் மலைக் கோயில் பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டத்தில் தென்னாங்கூர் திவ்ய திருத்தலத்திற்கு அருகில் அமைந்துள்ளது வெண்குன்றம் கிராமம். சுமார் 3,000 ஆண்டுகளுக்கு முன்னால் சித்தர்களால் உருவாக்கப்பட்ட இத்தலத்தில் 1,400 அடி உயரத்தில் உள்ள மலைமீது ஸ்ரீபர்வதவர்த்தினி சமேத ஸ்ரீதவளகிரீஸ்வரர் ஆலயம் உள்ளது. புராண காலங்களுக்குப் பிறகு ஆட்சி புரிந்த சோழ மன்னர்கள் புண்ணிய தமிழ் பூமியை 24 கோட்டங்களாகப் பிரித்து ஆட்சி புரிந்தனர். அதில், தொண்டை மண்டலத்தில் இருந்த 14 கோட்டங்களில் ஒன்று வெண்குன்றம்